கூடாது. தனிப்பட்ட முறையில் பேரவைத் தலைவரின் அறையில் கேட்க வேண்டும்.

அது நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(3) கவன ஈர்ப்பு

மின்வெட்டின் காரணமாக மில்களின் அரவைக் கட்டண உயர்வு குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, சட்டப் பேரவை விதிகள் 41-ன் கீழ் திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

THIRU K. T. K. THANGAMANI: Sir, we have given notice of some adjournment motions. The usual practice of rejecting the motions also has not taken place. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கொடுக்கிறீர்கள். அமைச்சருக்கு அனுப்பி இலாக்காவுக்குப் போய் வர வேண்டும். . .

DR. H. V. HANDE: Sir, may I make a request? For another two days only we will be able to raise such matters. Therefore I request whatever adjournment motions are given, they may be treated slightly more liberally by the Hon. Deputy Speaker.

MR. DEPUTY SPEAKER: The problem is this. Every small problem is brought in. Ordinary problems should not be brought under Rule 42.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, 75 சதவிகித மின்சார வெட்டின் காரணமாக சென்னையில் உள்ள அரவை மில்களில் அரவைக் கட்டணம் 300 சதவிகிதம் வரை உயர்த்தப் பட்டுள்ளது பற்றியும், கோதுமை போன்ற தானியங்களை அரைப்பதில் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைப் பற்றியுமான அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, 15—2—73 முதல் தொழில் நிறுவனங்களுக்கு மின்வெட்டு 75 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. இந்த உத்தரவின்படி நெல் அரவை மில்களுக்கும் உருளை மாவு மில்களுக்கும் மற்ற சிறு மாவு மில்களுக்கும் 75 சதவிகித மின்வெட்டு அமுலாக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு இதனால் ஏற்படும் அசௌகரியத்தின் காரணமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

(அ) நவீன நெல் அரவை மில்களுக்கு (Modern Rice Mills) முற்றிலும் விதிவிலக்கு.

(ஆ) தனியார் துறை நெல் அரவை மில்களுக்கு 25 சதவிகித வெட்டு.

(இ) உருளை மாவு மில்களுக்கு (Roller Flour Mills) 25 சதவிகித வெட்டு.

இந்த மாற்றங்கள் 22—2—1973 முதல் அமுலில் இருந்து வருகின்றன.

தற்போது உள்ள மின்சார இருப்பு, மேலும் சலுகைகள் அளித்திடுவதற்குச் சாதகமாய் இல்லை. மின்சார இருப்பு நிலையில் முன்னேற்றம் காணப்பட்டவுடன் இந்த மாவு மில்களுக்குச் சலுகைகள் அளிப்பது பற்றி அரசு கவனிக்கும். இதற்கிடையே அரவைக் கட்டணங்களை ஒட்டுமொத்தமாக நியாயமான அளவில் நிர்ணயிக்கும் சாத்தியக் கூறுகளை உணவுத் துறை ஆராய்ந்து ஆவன செய்யும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சீயக்காய், மிளகாய் ஆகியவற்றை அரைக்க சாதாரண மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஒரு கிலோ சீயக்காயின் விலை 3 ரூபாய் என்றால் அதை அரைக்க 6 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. மிளகாய்க்கு கிலோவுக்கு 2½ ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த மாதிரி சிறு சிறு அரவை மில்களில் அரைப்பதற்காக அநியாய விலை வாங்குவதைத் தடுக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏற்கனவே, இந்தக் குறைகள் சொல்லப்பட்டுத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சற்று சலுகை காட்ட வேண்டுமென்று இந்த நெருக்கடியான நிலைமையிலும் 25 சதவிகிதம் வெட்டு என்ற முறையில் சில பிரிவுகளை ஆக்கி இருக்கிறார்கள். சிறிது முன்னேற்றம் ஏற்பட்டாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதெல்லாம் கவனிக்கப்படும்.

(4) அறிவிப்புகள்

(அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1973-74-ம் ஆண்டுக்கான அவையுரிமைக் குழுவிற்கு தமிழ் நாடு சட்டப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் :

1. திரு. என். இராசாங்கம்
2. திரு. என். கணபதி
3. திரு. டி. கணபதி
4. திரு. க. உரொ. எட்மண்ட்
5. திரு. மா. சுப்பிரமணியம்
6. திரு. எம். சுரேந்திரன்
7. திரு. மு. சின்னசாமி
8. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி
9. திரு. கே. டி. கே. தங்கமணி
10. திரு. என். தர்மலிங்கம்
11. திருமதி ஜோதி வெங்கடாசலம்
12. திரு. கே. எ. வகாப்
13. திரு. பி. வெங்கடசாமி
14. திரு. கா. வேழவேந்தன்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS